## மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை – 2021

தமிழ்மொழியும் இலக்கியமும்
தரம் 10

| 22 | T | II |
|---|---|---|

இரண்டு மணித்தியாலம்

கவனிக்க:

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

(2) இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்

**01.பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடைதருக**

I. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு மீண்டும் திருத்தமாக எழுதுக.

அப்படி ஒரு கோப்பே இல்லை என்று ஒரே போடாகப் போட்டது.

II. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.

மெலிந்தப் பிறைக்கும்

III. நாம் விரும்பும் வகையில் விண்ணை அடையலாம். இதில் இடம் பெறும் ஆகுபெயரை இனங்கண்டு அது எவ்வகை ஆகுபெயர் எனவும் குறிப்பிடுக.

IV. வாதத்திற்கென்று வந்திருந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். இங்கு இடம்பெறும் எழுவாய் பயனிலைகளைக் குறிப்படுக.

V. நாளை அவன் பாடசாலை வரமாட்டான் இங்கு இடம்பெறும் எதிர்மறை இடைநிலை யாது?

VI. உள் முகவரி, உடல், முடிப்பு, நன்றி, ஒப்பம், தலைப்பு, முகவரி தரப்பட்ட விடயங்களைக் கொண்டு தொழில் முறைக் கடிதத்தின் கட்டமைப்பை ஒழுங்குபடுத்தி தருக.

VII. மேகங் கறுப்பதால் மழைவரப் போகிறது
மின்னல் மின்னுவதால் மழைவரப் போகிறது
சாரல் அடிப்பதால் மழைவரப் போகிறது
இம் மூன்று வாக்கியங்களையும் இணைத்து தனியொரு வாக்கியமாகத் தருக.

VIII. திரை, திறை என்பன பொருள் தரும் வகையில் வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

IX. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி மீண்டும் திருத்தமாக எழுதுக.

மேலே கிளம்பின பிறிற்றோ கட்சி கீழே இறங்கித் தரை மட்டத்திற்கு வந்து விட்டது.

X. திரிகூடராசப்பகவிராயப்பர் திருக்குற்றாலக் குறவஞ்சியை எழுதினார்.

இவ்வாக்கியத்தினை செயற்பாட்டு வினைவாக்கியமாக மாற்றி எழுதுக.

(20 புள்ளிகள்)

**02.பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து. ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

I. மனித ஜீவராசிக்கு ஐம்பூதங்கள் அடிப்படையாகக் காணப்படினும் நீரின் அவசியம் எல்லாக் காலங்களிலும் அறிஞர்களால் முன்மொழியப்பட்டுள்ளன. மனித தேவைகளுக்குப் பயன்படும் நீர் எதிர்காலத்தில் குறைவடைந்து செல்லும் என கூறப்படுகின்றது. இன்று மனிதன் பல்வேறு தேவைகள் பொருட்டு நீரைஅநாவசியமாக விரையம் செய்கின்றான் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால், நீரைப் பெற்றுக் கொள்வதற்கான மாற்று வழிகளை அவன் அறியவில்லை. நீரைப் பேண வேண்டியதன் அவசியத்தை உணரவில்லை. எனவே, நீரைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக

II. இளந்தலை முறையினர் தவறான வழியிலேயே செல்கின்றனர். அவர்களுக்கு முறையான வழிகாட்டல் இல்லை என்பது பலராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாகும். இதற்குக் காரணம், தேவையான பருவங்களில் அன்பு, அறம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதில்லை. இலக்கியங்கள் குறிப்பிடும் அறப்போதனைகளையேனும் இளைஞர்களிடத்திலே கொண்டு செல்வதில்லை. எனவே இக்கருத்துக்களை உள்ளடக்கி இளந்தலைமுறையிரை நல்வழிப்படுத்தும் வகையில் மேடைப்பேச்சு ஒன்று எழுதுக.

III. மனிதர்களிடையே வாசிப்பு என்பது மிகவும் குறைந்து விட்டது. வாசிப்பின் மூலம் பெறப்படும் பயன்களை இன்று வேறு வழிகளின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்பது கருத்து வாசிப்பிற்காக புத்தகங்களையோ அல்லது நூலகங்களையோ நாடும் போது ஏற்படும் சிரமங்கள், நேரமின்மை முதலிய காரணங்களால் மனிதன் தான் வாழும் சூழலில் இணையத்தளங்கள், கைத்தொலைபேசி, இலத்திரனியல் ஊடகங்கள் என்பவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனக் கருதும் ஒருவருக்கும் புத்தகவாசிப்பே மிகுந்த பயன் தரும் எனக் கருதும் இன்னொருவருக்கும் இடையில் அவற்றின் சாதகபாதகங்களை எடுத்துக் கூறும் வகையிலான உரையாடல் ஒன்று எழுதுக

IV. தந்தையை இழந்த சூழ்நிலையில் வெளிநாடு சென்ற தமேஸ், உலகினில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் மீண்டும் தன் சொந்த நாட்டிற்குத் திரும்பினான். தாய் நாட்டில் பொன் அதிசயங்கள் பலவற்றைக் கண்டான். பல்வேறு துறைகளும் உறுதுணையான நிலையில் விவசாயத்தின் மூலம் உயர் நிலையை அடைந்தான். அந்நிய தேசத்தை விட தன் நாடு மேலானதாக உணர்ந்தான் என்ற கருத்துப் புலப்பட ஒரு சிறுகதை எழுதுக

**( 25புள்ளிகள்)**

**03.பின்வரும் பந்தியை வாசித்து அதன் பிரதான கருத்தை 40-45 சொற்களில் சுருக்கி எழுதுக**

மனிதன் இதுவரை எத்தனையோ அரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கின்றான். நீர்வளம் நிலவளம் மிகுந்து நாகரிகம் முதிர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்து வந்த அழகிய பெரிய நகரங்களையும் கணநேரத்தில் உயிரினங்களே வாழ முடியாத நாசபூமியாக அழியக் கூடிய அணுக்குண்டை இயற்றியிருக்கின்றான். எண்ணிறைந்த வகைகளில் இக்காலத்தில் பயனளித்துவரும் மின்சாரத்தையும் ரேடியோவையும் கண்டுபிடித்திருக்கின்றான். நாம் பிரயாணம் செய்யத்தக்க ரெயில், மோட்டார்கார் முதலிய தானியங்கி ஊர்திகளை அமைத்திருக்கின்றான். மணியொன்றுக்கு நூற்றுக்கணக்கான மைல் தூரம் வான் வழியாக நம்மைக் கொண்டு செல்லவல்ல ஆகாயவிமானங்களை சிருஷ்டித்திருக்கின்றான். எஞ்சினியரிங் துறையில் பெனாமாக்கால்வாய் முதலிய பிரமாண்டமான வேலைகளை இயற்றி முற்றுவித்திருக்கின்றான். சில மணிக்கூறுகளில் ஆயிரக்கணக்கான புஸ்தகங்களை வெளியிட்டு அறிவை உலகெங்கும் பரப்பிவரும் அச்சியந்திரங்களை உருவாக்கியிருக்கிறான்.

இவையெல்லாம் அற்புதமானசெயல்களாகும். ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலாக ஒரு அற்புதத்தையும் அவன் இயற்றியிருக்கின்றான். அது யாது என்றால் அவன் பேசக் கற்றுக்கொண்டதும், எழுதக் கற்றுக்கொண்டதும் தான். அவன் ஆதிமக்கள் நிலையில் இருந்து நாகரிக நிலையை அடைவதற்கு இவை இரண்டுந்தான் அதிமுக்கியமான காரணங்களாகும்.

**(10புள்ளிகள்)**

**04. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்ளுக்கு விடை தருக**

சிவகங்கைச்செகராசசேகரனால் பாடப்பெற்ற தட்சணகைலாசபுராணம் திருக்கோணேஸ்வரம் பற்றிய தலபுராணமாகும். சைவராசபண்டிதர் என்னும் குருவின் வேண்டுகோளுக்கு அமையச் செகராசசேகரமகாராசன் பாடினார். தலபுராணங்களில் இந்நூல் பழமையானவற்றுள் ஒன்று. திருக்கோணேஸ்வரம் பற்றிக் கிடைக்கின்ற இலங்கையில் எழுந்த நூல்களில் இதுவே புராதனமானது. ஆலயம் சிறப்புற்றிருந்த காலத்தில் இந்நூல் பாடப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். மகாபுராணங்களிலே கூறப்படுகின்ற இந்துசமய தத்துவங்களையும் சைவசயமக் கருத்துக்களையும் தலச்சிறப்புப் பற்றிய செய்திகளையும் ஒருங்கிணைத்துக் கூறும் நூல் என்பதனால் சமய அறிவுக் களஞ்சியமாக இது விளங்குகின்றது. கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசலபுராணம் முதலிய நூல்களிலும் இதிலே காணப்படும் செய்திகள் பல விரித்துரைக்கப்படுகின்றன. இந்நூலானது பாயிரம் தொடக்கம் ஏழு சருக்கங்களைக் கொண்டுள்ளது.

1. திருக்கோணேஸ்வரத்தின் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறியவர் யார்?
2. சிவகங்கைச்செகராசசேகரனின் குரு யார்?
3. மகாபுராணங்களிலே கூறப்பட்ட சிறப்புக்கள் எவை?
4. தட்சணகைலாசபுராணத்தின் சிறப்பு யாது?
5. இப்பந்தியில் கூறப்பட்டுள்ள ஏனைய நுல்கள் இரண்டு தருக?

**(10புள்ளிகள்)**

**05.** இன்று நூலக வாசிப்பு அருகி வருகின்ற சூழலில் அதனை மீட்டெடுக்கும் பொருட்டு நீர் வசிக்கும் கிராமத்தில் பயன்பாடற்றுக் கிடக்கும் நூல் நிலையம் ஒன்றினை மீள்பயன்பாட்டிக்காக அதனை புனரமைப்பு செய்து தருமாறு கோரி உமது பிரதேசசெயலருக்கு 100 சொற்களில் அமையுமாறு
கடிதம் எழுதுக

**அல்லது**

இன்று உலகையே உலுக்கி வரும் கொடிய கொரோனா வைரஸ் நோயானது பல்வேறு வகையில் மக்களிடையே பாரிய பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றது. இதனை கட்டுப்படுத்த மக்களுக்குரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது இன்றியமையாததாகும். இதனை வலியுறுத்தி 100 சொற்களில் அமையுமாறு துண்டுப்பிரசுரம் எழுதுக

**(15புள்ளிகள்)**